[2013 *மார்ச்* 27

80—

சொந்தக் கட்டடம்

***4276—திருமதி ம. சக்தி:**

மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சீர்காழி தொகுதி, கொள்ளிடம் ஒன்றியம், ஆச்சாள்புரம் ஊராட்சியிலுள்ள நியாய விலைக் கடைக்குச் சொந்தக் கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. செல்லூர் கா. ராஜு, கூட்டுறவுத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்கள் அனுமதியுடன் திருத்திய விடையை அளிக்கிறேன்.*

(அ) மற்றும் (ஆ) சீர்காழி தொகுதி, கொள்ளிடம் ஒன்றியம், ஆச்சாள்புரம் ஊராட்சியிலுள்ள நியாய விலைக் கடை தற்போது ரூ.850 மாத வாடகையில் வாடகைக் கட்டடத்தில் இயங்கி வருகிறது. இந்த நியாய விலைக் கடைக்குச் சொந்தக் கட்டடம் கட்டுவதற்குப் போதுமான இட வசதி சங்கத்தில் உள்ளது. ஆனால், அவ்விடத்தில் கட்டடம் கட்டுவதற்கு சங்கத்தில் போதிய நிதி வசதி இல்லை. எனவே, மாவட்ட ஊரக வளர்ச்சி முகமையிலிருந்து உரிய நிதி உதவி பெற்று, சொந்தக் கட்டடம் கட்டுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திருமதி ம. சக்தி அவர்கள்.*

திருமதி ம. சக்தி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பசித்தார் பசி களையும் அட்சய பாத்திரமாய், ஏழைகளைத் தாங்கி நிற்கும் ஏந்தலாய், மாற்றம் தந்த மக்களுக்கு ஏற்றம் தரும் இன்றைய தமிழகமே, நாளைய பாரதமே அம்மா! வரியில்லா பட்ஜெட்டைத் தந்து வரலாறு படைத்திருக்கும் வாழும் வள்ளலே அம்மா! (மேசையைத் தட்டும் ஒலி) உங்கள் புனித பொற்பாதங்களை வணங்கி, எனது சார்பிலும், தொகுதி மக்களின் சார்பிலும் நன்றியைக்*

2013 *மார்ச் 27]*

காணிக்கையாக்குகின்றேன் அம்மா! மாண்புமிகு கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்களுக்கும் தங்கள் வாயிலாக நன்றியைத் தெரிவித்து அமர்கிறேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 81, மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. சண்முகவேலு, மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.*

81—

சாலை மேம்பாடு

***11743—திரு. சி. சண்முகவேலு:**

மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருப்பூர் மாவட்டம், உடுமலைப்பேட்டை வட்டம், காட்டுப்பட்டி, மாவடப்பு, குழிப்பட்டி, குருமலை, பூச்சிக்கொட்டான்பாறை ஆகிய மலைக் கிராமங்களிலுள்ள சாலைகளை மேம்படுத்த அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. கே.டி. பச்சைமால், வனத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

திருப்பூர் மாவட்டம், உடுமலைப்பேட்டை வட்டத்தில் வனத் துறையின் கட்டுப்பாட்டிலுள்ள காட்டுப்பட்டி, மாவடப்பு, குழிப்பட்டி, குருமலை, பூச்சிக்கொட்டான்பாறை ஆகிய மலைக் கிராமங்களின் வழியாகச் செல்லும் சாலையானது ஆனைமலை காப்புக்காட்டின் வழியாகச் செல்கின்றது. ஆனைமலை காப்புக்காடு புலிகள் காப்பக மைய மண்டலத்திற்குள் அமைந்துள்ளது. இச்சாலை அப்பர் ஆழியாறு முதல் குருமலை வரை சுமார் 25 கிலோ மீட்டர் தூரத்தில் 1978 ஆம் ஆண்டிலிருந்து 1985 ஆம் ஆண்டு வரை வனத் துறைமூலம் அமைக்கப்பட்ட சாலையாகும். இச்சாலை காட்டுப்பட்டி, மாவடப்பு, குழிப்பட்டி, குருமலை ஆகிய நான்கு கான் குடியிருப்புகளை (Forest Settlements) *இணைக்கிறது. இச்சாலையில் பழுதுகள் ஏற்படும்பொழுது ஆங்காங்கே பழுதுகள் நீக்கி பராமரிக்கப்பட்டு, வாகனங்கள் சென்றுவர இன்றுவரை ஏதுவாக உள்ளது.*